2050 ஐப்பசி
மாத இதழ்

# திறவுகோல்

ஒளிரும் ஆசிரியர் - 6

கானல் நீர்

நோய் என்றால் என்ன...?

யார் குற்றவாளி?

செண்பக வனம்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# நான் அவள் காதல்



வசந்தன்
மன்னார்குடி

நான் என்பது நான் அல்ல ஆண் (கணவன்)
அவள் என்பது அவள் அல்ல பெண் (மனைவி)
காதல் என்பது கலை

உலகில் நாம் நாமாக இருக்க வேண்டும், உண்மையாக இருக்க வேண்டும், நடிக்க கூடாது என்று அறிவுரை சொல்கிறோம் ஆனால் காதலைப் பொறுத்தவரை இந்த மேற்கோள்கள் உதவாது. நாம் அவர்கள்ஆக இருக்க வேண்டும், அவர்களுக்காக பொய் சொல்ல வேண்டும், அவர்களுக்காக நடிக்க வேண்டும். சாதாரணமாக சொல்ல வேண்டுமென்றால் விட்டுக்கொடுத்து வாழவேண்டும்.

காதலால் உண்டாகும் ஊடல்

ஆண்கள்

பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டுமென்றால் தனிமையில் உட்கார்ந்து யோசிப்பார்கள்

கணவனுக்கு தன் தொழிலில் சில பிரச்சினை. அப்பொழுது வீட்டிற்கு வந்து அதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பான். அப்பொழுது அவனிடம் மனைவி ஏன் உங்க மூஞ்சி ஒரு மாதிரி இருக்கு என்ன பிரச்சனை என்று கேட்கும் போது அவன் சிரித்துக்கொண்டே அதெல்லாம் ஒன்னும் இல்லை என்பான். மனைவி அதை விடாமல் மேலும் இரண்டு தடவை என்ன என்று கேட்டுக்கொண்டே இருப்பாள் பொறுமையை இழந்த கணவன் சத்தமாக கோபத்துடன் ஒன்றுமில்லை என்கிறன விடு என்பான். மொச பிடிக்கற நாயே மூஞ்ச பாத்தா தெரியாதா என்று ஊடல் ஆரம்பிக்கும் காதலால்.

இங்கே பெண் செய்யவேண்டியது ஆண் எதையோ யோசித்துக் கொண்டிருக்கிறான் என்றால் அவனை ஒரு மணி நேரம் தனிமையில் விட்டு விடுங்கள். பிறகு அவனே அந்த பிரச்சனைக்கு தீர்வு கண்டு உங்களிடம் வந்து அனைத்தையும் சொல்வான். காதல் கலையாகும்.

பெண்கள்

பிரச்சனைக்கு தீர்வு காணும் வரை கணவனிடம் பேசுவார்கள்.

பெண்கள் தங்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் அதை கணவனிடம் வந்து பேசிக் கொண்டே இருப்பார்கள். அப்போது அவர்களிடம் நேரம் ஒதுக்கி பேசாமல் தலை வலிக்குது, வேலை இருக்கு இப்படி ஏதாவது சொல்லி புறக்கணித்தால் காதல் ஊடலாக

உருவெடுக்கும்.

ஆண் செய்ய வேண்டியது பெண் தனது பிரச்சனையை பேச வரும் போது அவர்கள் சொல்வதை கேளுங்கள். அப்போது ஆண் அதைக் கேட்டுக் கொண்டு பெரிய புத்திசாலி போல் அதற்கு தீர்வு சொன்னால் அவர்களுக்குக் கோபம் வரும். அவர்கள் சொல்லும் போது நீங்கள் கேட்டால் மட்டுமே போதும் அவர்களே அதற்கு தீர்வு காண்பார்கள் அவர்களிடம் நீங்கள் நேரம் ஒதுக்கி அவர்கள் சொல்வதற்கு ஆம், இல்லை, அப்படியா, ஓ இப்படியா என்று ரியாக்ஷன்ஸ் கொடுத்தால் போதும். காதல் கலையாகும்.

ஆண் தனிமையில் இருக்கும்போது சக்தி பெறுகிறான்.

ஆண் பூமி மாதிரி பெண் சூரியன் மாதிரி என்று வைத்துக் கொள்வோம். சூரியனை பூமி நீள் வட்டப் பாதையில் சுற்றுகிறது. பக்கத்தில் வரும் பின் தூரம் செல்லும் ஆனால் சூரியனை சுற்றிக் கொண்டே இருக்கும். அதேபோல்தான் ஆண்கள் பெண்கள் பக்கத்தில் வருவார்கள் பேசிக் கொண்டிருப்பார்கள் தங்கள் சக்தியை இழப்பார்கள் பின் தூரம் செல்வார்கள் சக்தி பெற்ற பின்னர் மனைவியிடம் வருவார்கள். ஆனால் மனைவியை விட்டுவிட்டு சென்று விட மாட்டார்கள். கணவன் வரும்போது தங்கள் விருப்பத்தை அனைத்தும் பேசுங்கள் அவன் செல்லும்போது விட்டுவிடுங்கள் அப்போது விடாமல் பிடித்துக் கொண்டிருந்தால் காதல் ஊடல் ஆகும். அவர்கள் செல்லும் போது கூடவே சென்றால் அவர்களும் சென்று கொண்டே இருப்பார்கள் திரும்ப மாட்டார்கள். அவர்களை விட்டுப் பாருங்கள் காதல் கலையாகும்.

பெண் தனக்கு பிடித்தவர்களிடம் பேசும் போது சக்தி பெறுகின்றாள்.

பெண் தன் கணவனிடம் பேச வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கும் போது அவள் காதல் அதிகரித்துக் கொண்டிருக்கும். வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பும் கணவனிடம் அவள் வந்ததும் பேச வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருப்பாள். அவளிடம் நீங்கள் கவனமான சமிக்ஞை உடன் பேசிக் கொண்டிருந்தால் உங்கள் மீதான அவள் அன்பு அதிகரித்துக் கொண்டே இருக்கும் ஆனால் அவள் பேசும் பொழுது ஆண்கள் கைபேசி பார்த்துக் கொண்டோ அல்லது தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டோ இருந்தால் காதல் ஊடலாகும்.

அவள் உணர்வுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் நேரம் ஒதுக்குங்கள். அவள் சொல்வதை கவனமாக கேட்டு அதை நீங்கள் ஞாபகம் வைத்திருப்பதை அவளிடம் காட்டிக் கொள்ளுங்கள். காதல் கலையாகும்.

ஆணுக்கு பிடித்தது புகழ், திறமை, வீரம், வியாபாரம். இது தெரிந்தால் தான் ஆணை பெண் மகிழ்விக்க முடியும்.

கணவன் தன் தொழிலை திறமையாக செய்யாதபோது அவனிடம் என்ன இப்படி செய்கிறாய் என் தம்பியை என் அப்பாவை பார்த்தியா அவர்கள் எவ்வளவு திறமையாக தொழில் செய்கிறார்கள் என்று compare செய்யாதீர்கள். அது ஆணுக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தி உங்கள் மீதான வெருப்புணர்ச்சி அதிகரித்து காதல் ஊடலாகும். கணவனும் மனைவியும் ஓரிடத்திற்கு செல்கிறார்கள் அந்த இடத்திற்கு நேர் ரோட்டில் சென்றால் பத்து கிலோமீட்டர். ஆனால் கணவன் தன் திறமையை காட்ட குறுக்கு வழி ஒன்று இருப்பதாக தவறாக சென்று மேலும் நான்கு கிலோமீட்டர் சுற்றி தாமதமாக அந்த இடத்திற்கு செல்வார்கள். அப்போது மனைவி உனக்கு தான் ஒன்றும் தெரியவில்லை நேர் ரோட்டிலேயே வந்திருக்கலாம்ல எதுக்கு இப்படி அறிவு கெட்டதனமா பண்ற என்பாள்.

அது உண்மைதான் இருந்தாலும் இப்படி சொல்லாமல் குறுக்கு வழி எல்லாம் உங்களுக்குத் தெரிகிறது என்று பாராட்டுங்கள் சந்தோசபடட்டுமே. இதற்காக பொய் சொல்லனுமா என்று கேட்கிறீர்களா சொல்ல வேண்டும் நீங்கள் தான் உலகத்திலேயே அழகு என்று அவர்கள் உங்களை மகிழ்விக்க பொய் சொல்ல வில்லையா! அதேபோல்தான். உலகில் எல்லோரும் புகழ்ந்தாலும் கூட கணவனுக்கு தன் மனைவி புகழ்ந்தால் தான் மகிழ்ச்சி. நான் திறமையானவன், வீரமாணவன், புகழ் மிக்கவன் என்று தன் மனைவியிடம் நிரூபிக்க படாதபாடுபடுகிறான்.

ஒரு நாள் கணவன் வீட்டிற்கு வரும்போது அவன் சட்டை எல்லாம் கிழிந்து ரத்தம் சொட்ட வரும்பொழுது அதை பார்த்து அதிர்ந்து எங்கே சென்று யாரிடம் அடிவாங்கி கொண்டு இப்படி வர என்று கேட்டால் அவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. அடிகொடுத்த உனக்கே இவ்ளோ காயம்னா அடி வாங்கினவன் என்ன ஆனான் என்று கேட்டுப்பாருங்கள். பொய்யைச் சொன்னால் காதல் கலையாகும்.

பெண்ணுக்கு பிடித்தது அன்பு, அக்கறை, கருணை, பாதுகாப்பு. இது தெரிந்தால்தான் பெண்ணை ஆண் மகிழ்விக்க முடியும்.

பெண்களைப் பொறுத்தவரை இன்று நாம் கொடுத்ததை விட அதிகமாக கொடுக்க வேண்டும் அல்லது கொடுத்ததை மெயின்டன் செய்ய வேண்டும் (காதல்). காதலிக்கும் போது அடிக்கடி ஐ லவ் யூ சொல்லுவோம் கல்யாணத்திற்கு பிறகு அதை சொல்வதே இல்லை. அதை சொல்வதற்கு என்ன கஷ்டம் சொல்ல வேண்டியது தானே. அலுவலக மேலாளரை பிடிக்கிறதோ பிடிக்கலையோ காலை, மதியம், மாலை என்று வணங்கும்போது தன் வீட்டின் மேலாளருக்கு i love you சொல்வதில் என்ன சிரமம். மூன்று வேளை சாப்பிடுகிறோம் மூன்று வேளை சொல்வோம் I love you. காதலிக்கும் போது அளவோடு காதலித்து இருக்க வேண்டும் அப்போது ஒரு நாளைக்கு பல தடவை சொல்லிவிட்டு கல்யாணத்திற்கு பிறகு குறைத்துவிட்டால் காதல் ஊடல் ஆகும். பெண்களிடம் எப்போதும் அன்பாக பேசுங்கள், கைபேசியில் அவளிடமும்

உரையாடலை முடிக்கும்போது i love you என்று கூறிவிட்டு வைப்பதை வழக்கமாக்குங்கள் காதல் கலையாகும்.

தன் கணவனுக்கு நம்மீது அக்கறை இருக்கிறதா என்று சோதித்துகொண்டே இருப்பார்கள் பெண்கள். ஆண்  காய்ச்சல் வந்து இருக்கும்போது அவன் மனைவி அக்கறையுடன் அவனை பார்த்துக் கொள்வாள். அதேபோல் மனைவி காய்ச்சல் வந்து படுக்கும்போது ஆண் நான் அலுவலகம் செல்கிறேன் உன் அம்மாவிற்கு தகவல் கொடுத்து விட்டேன் வருகிறார்கள் உன்னை பார்க்க என்று சொல்லும்போது அவள் வெறுப்படைவாள். அவள் அக்கறையை உங்களிடமிருந்து மட்டுமே எதிர்பார்ப்பார்கள் அதனால் அவள் காய்ச்சல் என்று சொல்லும்போது உடனே நீங்கள் பெரும் செயலில் இறங்க வேண்டும் அல்லது இறங்குவது போல் சமிக்ஞை யாவது செய்ய வேண்டும். வா டாக்டர்கிட்ட போகலாம், நான் அலுவலகத்திற்கு விடுமுறை எடுக்கிறேன், டேப்லெட் போட்டியா, என்ன ஆச்சு என்று நீங்கள் அவள் மேலே உள்ள அக்கறையை காட்டும்போது அவள் மகிழ்வாள்.

அலுவலகத்திற்கு அரை நாள் விடுமுறை ஆனபின்பு அவளே எழுந்து நான் பார்த்துக்கொள்கிறேன் நீங்கள் அலுவலகம் சென்று வாருங்கள் என்று அனுப்பி வைப்பாள். இந்த இடத்தில் நீங்கள் உண்மையாகவோ அல்லது நடிப்பாகவோ அவளிடம் அக்கறை காட்டுங்கள் நல்ல விஷயத்திற்காக நடிப்பது தவறில்லை நடித்தால் காதல் கலையாகும்.

வெளி வேலைகள் முடிந்து வீட்டிற்கு வரும் ஆண்களிடம் முதல் அரை மணி நேரம் பிரச்சினைகளைப் பற்றி பேசாமல் இருங்கள். ஏனென்றால் அவன் வீட்டிற்கு உடல் மட்டும் தான் வந்திருக்கிறது மனம் இன்னும் வெளி நிலைகளிலேயே சுற்றிக் கொண்டிருக்கும். வந்ததுமே உங்கள் பிரச்சனைகளை பேசினால் அவன் மறுபடியும் தெறித்து ஓடுவான்.

உங்கள் வருகைக்காக காத்திருக்கும் பெண்களிடம் வீட்டிற்கு வந்ததும் அவர்களைப் பற்றி விசாரியுங்கள் காதல் செய்யுங்கள், அது பெண்களுக்கு மிகவும் பிடிக்கும் அப்போது அவர்களே உங்களை பார்த்து அசதியா இருக்கீங்க போய் ஓய்வெடுங்கள் என்பார்கள்.

‘‘காதலை கலை ஆக்குங்கள் காதல் கலைஞர் ஆகுங்கள்’’.

--

**வசந்தன்**
மன்னார்குடி

# நோய் என்றால் என்ன...?

உடலில் கழிவுகள் தேக்கமே நோய், அதனை உடலே வெளியேற்ற எடுக்கும் முயற்சியே நோய் அறிகுறிகள், நோய் ஒன்றே ஒன்றுதான். ஆனால் அது வெளியேறும் முறைகளைப் பொறுத்து அதன் அறிகுறிகள் பல தோன்றும். அந்த அறிகுறிகளை நோய் என்று நினைக்கும் ஆங்கில மருத்துவம், முதலில் மருந்துகளை கொடுத்து அந்த அறிகுறிகளை மறைக்க பார்க்கிறது. ஆனால் இந்த ஆங்கில மருந்துகள் அனைத்தும் வியாதியை அறிகுறியை அப்போதைக்கு மறைத்து மட்டுமே வைக்கும் குணப்படுத்த முடியாது. இதனால்தான் ஆங்கில மருத்துவம் எந்த ஒரு நோயையும் குணப்படுத்த முடியாது, கட்டுப்படுத்த மட்டுமே முடியும் என்று கூறுகிறது. - உண்மையில் ஒரு நோயை கட்டுப்படுத்த முடிந்தால் அதனை குணப்படுத்தவும் முடியும் அல்லவா...? எனவேதான் இந்த மருத்துவத்தில் வாழ்நாள் முழுக்க மருந்து எடுக்கவேண்டியுள்ளது.

இதனால் உடலில் மேலும் மேலும் கழிவுகள் தேங்கும், இத்துடன் உடல் ஏற்றுக்கொள்ளவே முடியாத ரசாயன மருந்துகளை கொடுப்பதால், உடலில் ஏற்கெனவே இருந்த கழிவுகளுடன் இப்போது இந்த புதிய ரசாயன கழிவுகளும் சேர்ந்துகொள்ளும். இப்போதும் உடல் தனக்குள் தேக்கப்பட்ட கழிவுகளை வெளியேற்ற முயற்சிக்கிறது, ஆனால் இந்த முறை சற்று கடினமாக வெளியேறுகிறது. முன்பை விட சில புதிய அறிகுறிகள் வெளிப்படுகிறது. இதனை உணராமல் இப்போது மருத்துவம் அதற்கு வேறு ஒரு பெயர் வைத்து அதற்கும் அதே ரசாயனங்களை தான் கொடுக்கிறது, எடுத்துகாட்டாக: ஒவ்வாமை அடூடூனுணுஞ்தூ, மற்றும் வேறு சில புதிய பெயர்களை கூறி அதற்கும் ஒரு புதிய மருந்தை கொடுக்கிறது.

இந்த நிலை மேலும் தொடரும்போது கழிவுகளை உடலை விட்டு நீக்க வேண்டிய உறுப்புகளின் கல்லீரல், சிறுநீரகம் இயக்கம் குறையும். இதனையும் மருந்துகளை கொடுத்து சரிசெய்ய முயற்சிக்கும் மருத்துவம் தோற்று விட, அந்த உறுப்பு கெட்டு போய்விட்டது என்று கூறி அந்த உறுப்பையே வெட்டி எறிந்துவிட்டு மாற்று உறுப்பு சிகிச்சை என்னும் பெயரில் மற்றவரின் உறுப்புகளை வெட்டி வைக்கும் முயற்சியில் ஈடுபடுகிறது, ஆனால் இதனையும் தன்னுடையது அல்ல என்று அடையாளம் கண்டுகொண்ட உடல், நோய் எதிர்ப்பு சக்தி வலுப்பெறும் போது அதனையும் நிராகரிக்கும். மாற்று உறுப்பு அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் தொடர்ந்து மருந்து எடுப்பது இந்த நோய் எதிர்ப்பு சக்தியை முடக்கி வைக்கவே என்பதை இங்கு கவனிக்க வேண்டும்.


தொடரும்......



- அருண்குமார்
நெடுவை

மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 17)



# செண்பக வனம்

’மதம்’ கொண்ட ’மோல’ யானைகளின் பிளிறல் கேட்ட அந்த வீதியில் நின்ற மற்ற யானைகள் எல்லாம் பயந்து ஓட்டம் பிடிக்க அந்த பகுதியே அல்லோல பட்டது.

யாரும் எதிர்பாராத வண்ணம் திடீரென ஏற்பட்ட இந்த நிகழ்வால் சாதாரண பொதுமக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் தெறித்து ஓடினார்கள் பொதுமக்களில் இருந்த வீரர்களும் கோட்டை வீரர்களும் மதம் கொண்ட அந்த யானையை கொள்ள பல முயற்சிகளை எடுத்து தோற்று கொண்டிருந்தார்கள்.

இந்த பதட்டம் அரச குடும்பத்துக்கு ஊர்வலத்தை பாதிக்க அந்த ஊர்வலம் தடுத்து நிறுத்தப்பட்டது ஆனால் இவை எதையுமே அறியாமல் ஊர்வலத்தின் கடைசி ரதத்தில் குந்தவை தேவியும் அருண்மொழித்தேவரின் மனைவிகளில் ஒருவரான பஞ்சவன் மாதேவியும் பேசிக்கொண்டிருந்தனர். கோட்டை வாசலில் நுழைந்ததுமே பஞ்சவன் மாதேவியின் வாடிய முகத்தை கண்ட குந்தவை தேவி தான் அவரோடு வருவதாக கூறி சட்டென ரதத்தில் இருந்து கீழே இறங்கி பஞ்சவன்மாதேவியின் ரதத்தில் ஏறிக் கொண்டார்.

இன்று காலையிலிருந்து தான் கண்ட அபசகுன அறிகுறிகளை பஞ்சவன் மாதேவி குந்தவை தேவியிடம் கூறிகொண்டிருக்கும் நேரத்தில் தான் ஊர்வலம் தடைபட்டது. ஊர்வலம் தடைபட்ட காரணத்தினால் இவர்கள் இருவரின் பேச்சுவார்த்தையும் தடைபட அவர்களிருவரும் அப்போதுதான் கோட்டைக்குள் நிலவி இருக்கும் அசாதாரணமான சூழ்நிலையை கவனித்தார்கள் அதுவரை அவர்களுக்கு இரு புறமும் காவல் வந்த வேளக்காரப் படை தங்கள் முன்னே நடக்கும் கலவரத்தை அடக்க முன்னேற ஒரு சிலர் மட்டுமே ஊர்வலத்திற்கு காவலாக நின்றார்கள்..

அரசுக்குல ஊர்வலத்தின் முதலாவது ரதத்தில் இருந்த சோழ நாட்டு பெரு வீரரான வந்தியத்தேவர் மதுராந்தகரை ரததிலேயே இருக்க சொல்லிவிட்டு ரதத்தில் இருந்த பெரிய ஈட்டியுடன் ரதத்தின் அருகே வந்த கலவரத்தால் வீரனைஇழந்த குதிரை மீது தாவி ஏறி மத யானையை நோக்கி விரைந்தார்.

வந்தய தேவரோடு வேலைக்கார படையும் இணைந்துள்ள. யானையை எதிர்க்கும் கூட்டம் வலுவானது ஆனால் யானைகள் அதற்கு எதற்குமே சளைக்கவில்லை முன்னை காட்டிலும் கூடுதல் வீரியமாய் தாக்கத் தொடங்கின. வந்தியத்தேவர் எறிந்த ஈட்டி யானையின் காது மடலை கிழித்துக்கொண்டு முன்னங்கால் செருகி நிற்க அதனை வெகு ஆத்திரத்தோடு பிடுங்கி எறிந்தது யானை.

வீரர்களின் கூட்டத்திற்கு உள்ளே நிராயுதபாணியாய் நின்றிருந்த வந்தியத்தேவனின் காதிலே ‘‘மாமா‘‘ என்ற குரல் கேட்க குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்த்த வந்தியத்தேவனுக்கு வலுவான கோடாரி காற்றில் பறந்து வருவதை கண்டு அதை லாவகமாய் பிடித்தார்.

கோடாரியை எறிந்த மதுராந்தகத் தேவர் என்னும் இராஜேந்திர சோழர் அடுத்த மத யானையை நோக்கி குதிரையில் விரைந்தார் அவர் கையில் வேறு ஒரு கோடாரி இருந்தது இந்த கோடாரிகள் போர்க்களத்தில் உபயோகப்படுத்துவதற்கு என்றே விசேஷமாக உருவாக்கப்பட்டது அதனை மிக லாவகமாய் பிடித்துக்கொண்டு குதிரையில் முன்னேறிய மதுராந்தகத் தேவரின் முன்னே 10 15 அடியில் யானை இருந்தாலும் யானைக்கு மறுமுனையில் அதுவரை பொறுத்து பொறுத்து பார்த்த மாணிக்கமும் கரியனும் களத்தில் இறங்கினர்.

கருத்து பெருத்திருந்த கரியன் சட்டென யானையின் முன்னே நின்று பெரிதாய் உறும யானை சில நொடி சிலைபோல் நின்றது அந்த நொடிப் பொழுதை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ராஜேந்திர மதுராந்தகரோ வெகு சாதுரியமாக குதிரையின் மேலிருந்து யானையின் முதுகில் தாவி ஏற மாணிக்கமோ தரையில் கிடந்த ஈட்டியை எடுத்துக்கொண்டு யானையின் வெகு அருகில் செல்ல வெறியில் இருந்த யானை கரியனை தூக்கி சுழற்றி அடிக்க எண்ணி கரியனை பிடித்து தூக்கியது கீழே இருந்த மாணிக்கம் தன் துதிக்கையோடு கரியனை மேலே  தூக்கிக்கொண்டு இருந்த யானையின் கழுத்தில் ஈட்டியை ஏற்றினார் அதே நேரம் அதே நொடி யானையின் மீது ராஜேந்திர மதுராந்தகத் தேவர் தன் கையில் இருந்த கோடாலியை கொண்டு யானையின் உச்சந்தலையில் இறக்கினார் இந்த மூன்று நிகழ்வும் ஒரே சமயத்தில் நிகழ்ந்ததால் அந்த கணமே யானையின் உயிர் பிரிந்தாலும் யானையின் தும்பிக்கையில் இருந்த கரியன் எனும் அந்தக் கரும்புலி தூக்கி வீசப்பட்டது வீசிய இடத்தில் இருந்த ரதத்தின் அடியில் புகுந்து கொண்டது  கரியன்..

ஆனால் அந்தோ பரிதாபம்  உயிர் பிரிந்த அந்த பெருத்த யானையும் அந்த ரதத்தின்

மீதே விழுந்தது . அதே நேரத்தில் வந்தியத்தேவனும் வேலைக்கார படையும்  மற்ற யானையை வீழ்த்தியிருந்தார்கள் யானைகளை வீழ்த்திய சந்தோசத்தை கொண்டாடும் வண்ணம் ‘‘ஓ‘‘ வென்று  படை வீரர்கள் கூட்டம் கொக்கரிக்க ஆனால் அந்த யானைகளால் ஏற்பட்ட இழப்புகள்  அதிகமாக இருந்தது 60க்கும் மேற்பட்ட பொதுமக்களும் வீரர்களும் இறந்து கிடந்தனர் இந்த இழப்பை கொண்டு ஏற்படுத்தப்படும் கவனத் திசை  மாற்றத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு அரசகுல ஊர்வலத்தின் அருகே ஒரு பெரிய விபரீதம் அரங்கேறியது....

அது என்ன...?

## தொடரும் ...

கற்க கசடற
உள்ளத்தில் உண்மை வேண்டும்
உழைப்பினில் நேர்மை வேண்டும்
கள்ளத்தனம் அழிய வேண்டும்
கண்ணியம் செழிக்க வேண்டும்
எண்ணம்போல் வாழ்க்கை வேண்டும்
ஏழ்மைத்துயர் ஒழிய வேண்டும்
பண்பாடு ஒளிர வேண்டும்
பகுத்தறிவு மிளிர வேண்டும்
நீதியில் நியாயம் வேண்டும்
நிர்வாகத் தூய்மை வேண்டும்
இதயத்தில் கருணை வேண்டும்
இயன்றவரை உதவ வேண்டும்
ஒற்றுமை நிலைக்க வேண்டும்
ஒழுக்கங்கள் தழைக்க வேண்டும்
பெண்மையைப் போற்ற வேண்டும்
பேராசை துறக்க வேண்டும்
தாய்மொழி வாழ்த்த வேண்டும்
தடையில்லா உரிமை வேண்டும்
கசடற கல்வி வேண்டும்
கற்றபடி நிற்றல் வெண்டும்

**பொன்.தெய்வா**
ஐவேலி

# கானல் நீர்


விஜயவர்மன்

உலகம் தோன்றிய பொழுது ஓர் அறிவு உயிர் உருவாகி, அதிலிருந்து இரண்டு, மூன்று, நான்கு என தோன்றி இறுதியாக ஆறறிவு படைத்த மனிதன் உருவானதாகவே அறிவியலும், இதிகாசங்களும் கூறுகின்றன. ஓர் ஆற்றலை உருவாக்கவும் முடியாது, அழிக்கவும் முடியாது என்பது அறிவியல் விதி. பூமியும் அவ்வாறே உருவாக்கப்படவுமில்லை, அழிக்கபடுவதுமில்லை.

பூமி என்னும் மூன்றாவது கோள் பல நூற்றாண்டுகளாக அதன் இயல்பிலிருந்து மாறாது சுழன்று கொண்டேயுள்ளது., அதில் உயிர்கள் தோன்றுவதும், மறைவதும் ஓர் சுழற்சியே அன்றி, பூமி ஒருபோதும் அழிவதுமில்லை, உருவாக்கப்படுவதுமில்லை என்பது அறிவியலாளர்கள் கருத்து.

ஆகவே, ஒவ்வொரு சுழற்சியிலும் மனிதன் தோன்றுவதும், மறைவதும் இயற்கையின் விதி. அதில், நம் வாழ்நாளில் நாம் வரையறுத்து கொள்ளும் கோட்பாடுகளும், விதிமுறைகளும், வாழ்கையை மகிழ்ச்சியுடனும், ஒழுக்கத்துடனும் (மற்றவர்களுக்கு தீங்கு செய்யாமல்) வாழ்ந்துவிட்டு போவதற்காக உருவாக்கப்பட்ட எல்லைகளேயன்றி, அவையாவும் கட்டாயமாக்கப்பட்ட நிபந்தனைகளல்ல.

குழந்தை பிறந்ததிலிருந்து அதற்கு இலக்குகளை வைத்து வளர்க்க தொடங்குகிறோம். 2 வயதில் Pre-School போக வேண்டும், 5 வயதில் ஆங்கிலம் படிக்க ஆரம்பிக்க வேண்டும், 9ஆம் வகுப்பிற்குள் ஆங்கிலம், கிந்தி, இசை என அனைத்திலும் கை தேர்ந்து விடவேண்டும், 10,12 ஆம் வகுப்புகளில் மாவட்ட, மாநில அளவில் முதல் மதிப்பெண் எடுக்க வேண்டும், கல்லூரியிலேயே வேலை வாய்ப்பை உறுதி செய்ய வேண்டும், வேலைக்கு போனதும் திருமணம் செய்ய வேண்டும், திருமணம் முடிந்த ஓராண்டுக்குள் குழந்தை பெற்றெடுக்க வேண்டும், மறுபடி அந்த குழந்தையையும் 2 வயதில் Pre-School போக நிர்பந்திக்கின்றோம்.

5 வயதில் தொடங்கி 21 வயது வரை அனைத்து வகுப்புகளிலும் முதல் மதிப்பெண் எடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்; ஒரு வகுப்பில் படிக்கும் 50 மாணவர்களும் முதல் மதிப்பெண் எடுப்பது சாத்தியமா.? எல்லோரும் மருத்துவர்களாக, வழக்கறிஞர்களாக வேண்டுமென்றால், யார் தான் இங்கு தொழில் முனைவோராகவும், விவசாயம் சார்ந்த்தொழில் புரிவோராகவும், எழுத்தாளராகவும், பல அறிஞர்களை உருவாக்கும் ஆசிரியர்களாகவும் உருவெடுப்பது.?

ஒரே அளவு கொண்ட சட்டை நம் அனைவருக்கும் பொருந்துமா.? அவரவர்க்கு ஏற்றார் போல் தானே ஆடைகளணிகிறோம்.? அவ்வாறு இருக்கையில், வெற்றி என்பது யாரோ

ஒருவர் கூறுவதை வைத்து எவ்வாறு இங்கு கணிக்க இயலும்.? இந்த வயதில் திருமணம் முடித்திருக்க வேண்டும், இந்த வயதில் வீடு கட்டியிருக்க வேண்டுமென நிபந்தனைகள் ஏன்?

நாம் நாகரிகமென கருதும் இரு தவறுகளில் முதன்மையானது நாம் கட்டும் வீடு. நம் வசதிக்கும் பொருளாதாரத்திற்கும் ஏற்ற வகையில் வீடு கட்டுவதைக் காட்டிலும், யாரேனும் ஒருவருடைய வீட்டின் அளவை கருத்தில் கொண்டு கட்டப்படும் வீடுகள் தான் இங்கு அதிகம். ஊரார் மெச்ச வீடு கட்டிவிட்டு, அதன் கடனை அடைப்பதற்காக வெளி நாடுகளில் வாழ்க்கையை தொலைக்கும் ஆடவர்கள் நம்மில் ஏராளம்.

இரண்டாவது, மற்றவர்களிடம் நம் செல்வாக்கை உயர்த்தி காண்பிப்பதற்காக செய்யப்படும் ஆடம்பர திருமணங்கள். ஒரு நாள் கூத்திற்காக பல லட்சங்களை செலவு செய்து விட்டு பல வருடங்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறோம். இது போன்ற மாய நம்பிக்கைகள் தான் வெற்றி என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு நாள் கூத்திற்காக பல லட்சங்களை செலவு செய்து விட்டு பல வருடங்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கிறோம். இது போன்ற மாய நம்பிக்கைகள் தான் வெற்றி என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்.

வட இந்தியாவை ஆண்ட முகலாயர்களின் வரலாற்றை புரட்டிப் பார்த்தால், ஒரு உண்மை புலப்படும். முகலாய அரசர்கள் அரியணையில் காலம் தள்ளிய நாட்களை விட, அந்த அரியணையை கைப்பற்ற காடுகளில் வாழ்ந்த நாட்கள் தான் அதிகம். முதல் நாள் இரவு அரசராக வலம் வந்தவர்கள், மறுநாள் காலை காடுகளில் பதுங்கி வாழும் குற்றவாளிகளாக துயிலெழுந்ததுண்டு. ஏற்ற, இறக்கங்களை சமமாக பாவிக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பல முகாலய அரசர்களின் திருமணங்கள் காடுகளில் பதுங்கியிருந்த நாட்களில் தான் நடைபெற்றன. ஆனால் இன்று, மணமகனின் சொத்து நிலவரம், பார்க்கும் உத்தியோகம், ஆண்டு வருமானமென பல காரணிகள் தான் கூர்ந்து கவனிக்கப்படுகிறதேயன்றி, குணநலன்களும், திறமைகளும் கண்டுக்கொள்ளப்படுவதில்லை. எல்லா ஆடவரையும் அவர்களது வருமானத்தை வைத்து தரவரிசையில் பட்டியலிட முடியாது.

பறக்கும் இயல்பில்லையென்பதால், ஒரு கிளி தோல்வியடைந்து விட்டதென கூறவியலுமா? அல்லது, நீந்தும் இயல்பில்லாததால், ஒரு மீன் தோற்றுவிட்டதென கூறலாமா? மீனுக்கு நீந்த தெரிவது போல, கிளிக்கு பறக்க தெரிவது அதன் இயல்பு. ஒவ்வொரு மனிதனுடைய கை ரேகையும் வேறுபடுவதை போல், அவர்களின் திறமையும், அவர்கள் இங்கு பிறந்ததன் காரணிகளும் வேறுப்படும்.

ஒரு காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; நடுவே ஒரு கோட்டினை வரையுங்கள்; நீங்கள்

அடைந்த / அடைய முயன்ற வெற்றியென கருதும் ஒன்றை இடது புறம் எழுதுங்கள்; அதனை அடைய முயற்சித்த பொழுது நீங்கள் இழந்தவற்றை வலது புறம் எழுதுங்கள்: இப்பொழுது உங்கள் மனதிடம் கேளுங்கள்: நீங்கள் அடைந்தது முழுமையான வெற்றியா.? அல்லது இழந்தவைகளை கணக்கிட்டால், மிகப் பெரிய தோல்வியா.?

வாழ்க்கையென்பது ஓர் தொடர் பயணமேயன்றி, இலக்குகளை கொண்ட தொகுப்பல்ல. எண்களையும் கணக்குகளையும் கொண்டு ஒருவருடைய வெற்றியை தீர்மானிப்பதென்பது, கானல் நீரை வைத்து தாகம் தணிக்க முயல்வதற்கீடாகும் என்பதை நினைவில் கொள்வோம்.

--

**விஜயவர்மன்,**

மன்னார்குடி



**“‘வரலாற்றின் சுவடுகளில் மன்னார்குடி’’**

என்ற தொடரை எழுதி வந்த

சகோதரி **அபிராமி பாஸ்கரன்**

இறைவனடி சேர்ந்தார்

என்பதை வருத்ததுடன்

தெரிவித்துக் கொள்கிறோம்.

# என்றும் பதினாறு (90'S Kid's)

90- ல் பிறந்த பாக்கியசாலிகள்
நாங்கள்

ஆண்டவனால் அனுப்பப்பட்ட
அவதாரங்கள்
நாங்கள்

தாலாட்டு கேட்டு தாய்மடி சாய்ந்து
உறங்கிய தங்க புஷ்பங்கள்
நாங்கள்

நிலவை காட்டி நிலாச்சோறு சாப்பிட்டு
வளர்ந்த
வானத்து விண்மீன்கள்
நாங்கள்

கால்சட்டை உடுத்தி காலணிகள்
இல்லாமல்
கால்நடையாய் கல்வி கற்க சென்ற
காளையர்கள்
நாங்கள்

பட்டாம்பூச்சி பிடித்து மயில் தோகை
எடுத்து பாதுகாத்து வைத்த பைங்கிளிகள்
நாங்கள்

சைக்கிள் டயர் ஓட்டி சாகசம் செய்த
சாகச வீரர்கள்
நாங்கள்

மாடு பிடித்து ஏர் தழுவி விவசாயம்
செய்த விவசாயிகள்
நாங்கள்

கூட்டான்சோறு ஆக்கி கூட்டமாய் கூடி
குறும்புத்தனம் செய்த குழந்தைகள்
நாங்கள்

தேன் மிட்டாய் சுவைத்து தேங்காய் கீற்று
திருடி
சுவைத்த
சுவைப்பிரி
யர்கள்
நாங்கள்

அருவியில்
குளித்து
குளத்தில்
கூச்சல்
போட்டு
அடிவாங்கி
ய ஆண்
சிங்கங்கள்
நாங்கள்



S.S. கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை

தீப்பெட்டி வைத்து கைபேசி தயாரித்து
வீடியோகேம் விளையாடிய
விஞ்ஞானிகள்
நாங்கள்

பட்டம் செய்து பறவையாய் வானில்
பறக்க விட்ட பைலட்டுகள்
நாங்கள்

காகிதத்தில் கப்பல் செய்து கட்டுமரமாய்
மிதக்கவிட்ட
கப்பலோட்டிகள்
நாங்கள்

சக்திமானை சாமியாய் நினைத்து
சண்டையிட்ட
சண்டியர்கள்
நாங்கள்

பட்ட படிப்பு இருந்தும்
வேலையில்லாமல்
இருக்கும் பட்டதாரிகள்
நாங்கள்

அழகு இருந்தும் அலட்டிக் கொள்ளாத
ஆடவர்கள்

நாங்கள்

பெண்களை பார்த்தால்
கண்களை மூடும் கன்னியர்கள்
நாங்கள்

என்றும் அள்ள அள்ள குறையாத
அன்பை வரமாய் பெற்ற
அன்னப்பறவைகள்
நாங்கள்

காலத்தால் அழியாத
காவியங்கள்
நாங்கள்

காலம் முழுவதும் பேசப்படும்
காலச்சுவடுகள்
நாங்கள்

அனைத்து இன்பங்களையும்
அடைந்த அதிஷ்டசாலிகள்
நாங்கள்

என்றும்
அன்புடன்

S.S.கார்த்திக், DME
உள்ளிக்கோட்டை

---

## மன்னவனுக்காக

கனவுகள் பல சுமந்து
கரம் கோர்த்தேன்
மன்னவன் துனைவியாய்!

என்ன கவலை சூழ்ந்தாலும்
குரல் ஒலி ஒன்று
போதுமே புன்னைகை
சூழ்ந்து கொள்ளுமே!

கருவிழி அசைவினில் என்
எண்ணங்களை
படித்திடுவார்!

அலைபேசியின் நிமிடங்களில்
கரைந்து போகிறோம்
அருகினில் கரம்கோர்த்து கதை
பேசுவதை போல்!

அவர் கரம் தொட்டது முதல்
தொட்டதெல்லாம் துளங்கியது
எனக்கு!

தோல்விகள் பல கண்ட எனக்கு
வெற்றி திருமகளை
கருவாய் கொடுத்து
ஈன்று எடுத்தேன் என்
மகாராணியை!

ஆசைகள் யாவற்றுக்கும் துணை
நிற்பவர் கிடைத்தால் வரம்
அதை அவருடையாதாக்கி வாழ்வதால்
நான் பாக்கியசாலி!

மூச்சுக்காற்றாய் வாழ்கிறோம்
ஒருவருக்கொருவர்
இந்த பயணம் நீளட்டும் கோடி
ஜென்மங்கள் வரை!

என் இனிய முதலாம் ஆண்டு
இனையேற்பு விழா வாழ்த்துக்கள்
மன்னவரே



இப்படிக்கு
ரம்யா வினோத்குமார்
உள்ளிக்கோட்டை

# ஒளிரும் ஆசிரியர் - 6

## கணிதத்தைக் கற்கண்டாக்கி வரும் ஒப்பற்ற ஆசிரியர் கணேஷ்!




அண்மைக்காலமாக ஆசிரியப் பேரினத்திற்கு நிகழ்காலம் போதாத காலமாக மாறிவிட்டது குறிப்பிடத்தக்கது. நின்று நிதானித்து மூச்சு விடக்கூட கால அவகாசம் தராமல் தொடர்ச்சியாகப் பல்வேறு கற்றல் கற்பித்தலுக்குப் பேரிடர் விளைவிக்கும் அலுவல் சார்ந்த வேலைகளை முடிக்கச் சொல்லிக் கட்டாயப்படுத்தும் போக்குகள் மலிந்துள்ளன. இவையனைத்தையும் விட்டுவிட்டுக் கிடைக்கும் இணையவழி இணைப்பைக் கொண்டு ஆசிரியர்கள் தம் சொந்த செலவில் சுயமாகவோ அல்லது கணிணி மையங்களிலோ நேர காலமில்லாமல் அலைந்து திரிந்து முடித்தாக வேண்டிய நிலை என்பது பரிதாபத்திற்குரியது. ஆசிரியர்கள் வருகை, மாணவர்கள் வருகை, வாயில் எளிதில் நுழையாத பல்வேறு திடீர் திடீரென இறக்குமதி செய்யப்பட்ட சிக்ஷா, சமக்ரா, போஸான், ஸாலா ஸித்தி முதலான அழிந்தொழிந்த வடமொழிப் பெயர்களுடன் உலா வரும் மத்திய அரசுத் திட்டங்கள் என தொடர் படையெடுத்துத் தாக்குவனவற்றைச் சூதானமாக நிறைவேற்றி முடிக்க இருபால் ஆசிரிய, ஆசிரியைகள் படும் துயரங்கள் சொல்லவொண்ணாதவை.

ஆசிரியர் மீதான துல்லியத் தாக்குதல்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுவது



சகிப்பதற்கில்லை. போதுமான தகவல் தொடர்பும் இணையவழி இணைப்பும் கிடைக்கப் பெறாத, போக்குவரத்து வசதியற்ற, தொழில்நுட்ப கோளாறுகள் குறித்து நிவர்த்தி செய்ய இயலாத குக்கிராமங்களில் பணிபுரியும் ஆசிரிய, ஆசிரியைகளை ஆதார் அடிப்படையிலான தொடுவுணர் வருகைப்பதிவு மேற்கொள்ள அதிகார சாட்டைச் சொடுக்குவதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இது போதாதென்று வயது வேறுபாடின்றி யார் யாரோ ஆசிரியர்களுக்குப் பல்வேறு ஊடகங்கள் மூலமாக, 'ஆசிரியர் என்பவர் இப்படி இருக்க வேண்டும்; அப்படி விளங்க வேண்டும்' என்று வாய்வலிக்க புத்திமதி புகட்டுவது மறுபுறம். நல்ல விளைச்சல் நிலத்தில் ஓரிரு களைச் செடிகள் காணப்படுவதைப் போல நல்லாசிரியர் பெருமக்கள் திரளில் ஒருசில புல்லுருவிகள் இருப்பது தவிர்க்க இயலாத ஒன்று. அதற்கு ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தை எப்போதும் ஒருவித பதட்டத்தில் வைத்திருக்க நினைப்பது பேதமையாகும். அடுக்கடுக்காகத் தொடுக்கும் ஆயிரம் கொடும் அம்புகளைத் துச்சமாகப் புறந்தள்ளி ஏழை எளிய அடித்தட்டுக் குழந்தைகளின் கல்வி நலனே தம் தலையாயக் குறிக்கோளாகக் கொண்டு தம் மனசாட்சிக்கு மட்டும் செவிமடுத்துத் தீயாய் பணிபுரியும் ஆசிரியர் கூட்டம் அன்றும் இன்றும் என்றும் இருப்பது மறுப்பதற்கில்லை. அந்த வகையில் காவிரிக் கடைமடைப் பகுதியான, விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிகம் வாழும் திருவாரூர் மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியம் கிளரியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி யின் கணிதப் பட்டதாரி ஆசிரியர் திரு S.கணேஷ் அவர்களது கல்வித் தொண்டு அளப்பரியது.



பல்துறை அறிவும் மொழிப்புலமையும் கொண்ட மகாகவி பாரதியே கணிதம் குறித்து, 'கணக்குப் பிணக்கு ஆமணக்கு' என்று கசந்த நிலையினை சாதிய, பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கிய அரசுப்பள்ளிப் பிள்ளைகள் அடையாதவாறு கற்கண்டு கணிதம் என்று தித்திக்க வைக்கும் இவரது முயற்சிகள் பாராட்டத்தக்கவை. எளிய, விளையாட்டு மற்றும் தானே செய்து கற்றல் முறைகளில் எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத கணிதத் தேற்றங்கள் மற்றும் கணக்குகள் ஆகியவற்றை இவர் இலகுவாக மாணவ, மாணவியரிடம் கொண்டு சேர்க்கும் உத்தி

ஏனையோருக்குப் பாடம் எனலாம். கணித உருவங்கள் பெயரில் குழு உருவாக்கி வடிவியல் கருத்துக்களை தாமே செய்து கற்றல் முறையில் மகிழ்ச்சியாகக் கணிதத்தைக் கற்கும் சூழலை வடிவமைத்து தந்தது பாராட்டத்தக்கதாகும்.

அதுபோலவே, ஒழுங்கற்ற உருவங்களின் பரப்பு காணும் முறைக்கு வரைபடங்களைக் கொண்டு வரையச் செய்து விளக்கம் அளித்துள்ளது சிறப்பு. பொதுவாகவே, கணித கருத்துக்களை எளிய விளையாட்டுகள் மூலமாகக் கற்க ஆசிரியர்கள் மாணவர் மைய அணுகுமுறையை வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் கற்பித்தலில் உட்புகுத்தி வெற்றி காண்பது இன்றியமையாதது. இவையெல்லாம் தொடக்கநிலைக்குத் தான் சாத்தியம் என்றும் பொருத்தம் என்றும் புறம்தள்ளும் நடவடிக்கைகளை உயர் தொடக்க, உயர்நிலை மற்றும் மேனிலை வகுப்புகளைக் கையாளும் ஆசிரியர்கள் கருதுவது ஏற்கத்தக்கதன்று. அதற்குரிய சாத்தியக்கூறுகள் இருக்கும் பட்சத்தில் மாணவர் நிலைக்கு இறங்கி வருவதைக் கீழான செயல் என நினைக்காமல் எளிதில் விளங்கிக்கொள்ள முடியாத கணிதக் கருத்துக்களைப் புரிந்துகொள்ள மாணவருக்கு இடமளிக்க வேண்டியது ஆசிரியரின் கடனாகும்.

கணிதம் கற்பித்தலில் தகவல் தொழில்நுட்ப கருவிகளின் பயன்பாடுகள் குறிப்பிடத்தகுந்தவை ஆகும். ஏனெனில், இக்கால பச்சிளம் குழந்தைகள்கூட பெரியவர்கள் கையாள அச்சப்படும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களை வெகு இயல்பாக, மிக இலாவகமாக, அசாத்தியமாகப் பயன்படுத்தி வருவது கண்கூடு. இன்றும் சில ஆசிரியப் பெருமக்கள் திறன்மிகு செல்பேசியைத் திறமுடன் கையாளத் தெரியாமல் தவிப்பதைக் காண முடியும். ஆதலாலேயே, ஆசிரியர்களுக்கு அண்மைக்காலத்தில் வழங்கப்படும் பயிற்சிகளில் ஆன்ட்ராய்டு செல்பேசிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயம் வகுப்பறைகளில் செல்பேசி உள்ளிட்ட கருவிகள் துணைக்கொண்டு கற்பித்தலை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுவது வாடிக்கையாக உள்ளது.



காலந்தோறும் நிகழும் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப தம்மைத் தகவமைத்துக் கொள்ளும் ஆசிரியர்கள் பிழைத்துக் கொள்கின்றனர். அவ்வாறின்றித் தேங்கிக் கிடப்போர் பல்வேறு வகையான இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இவ் ஆசிரியர் முதல்வகை. கற்பித்தலில் ஏமாற்றங்களைத் தவிர்க்க புதிய மாற்றங்களுக்கேற்ப தன்னை உருமாற்றிக் கொண்டு கற்றலில் புதுமைப்




படைத்து வருவது முன்மாதிரி செயலாகும். கணிணியில் கணிதத்தை மாணவர்கள் எளிதாகவும் விரைவாகவும் ஆர்வமுடன் கற்றுக்கொள்வது மட்டுமல்ல. கற்றலில் மிகவும் பின்தங்கிய, மெல்ல மலரும் மாணவர்களிடையே அதிகம் காணப்படும் தொடர் விடுப்பு மற்றும் இடைநிற்றல் போக்குகள் கணிணிவழிக் கற்றலால் மாறி வருகின்றன. மாணவர்கள் நாடோறும் பள்ளி வருவதை இது ஊக்குவிக்கிறது.

விலையுயர்ந்த கற்றலுக்கு உதவும் இதுபோன்ற கருவிகளைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் பழுதாகிப் போய்விடும் என்று கருதி இரும்பு அலமாரிக்குள் மிக பாதுகாப்பாக, பயன்படுத்தாது வைத்திருக்கும் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டியவை. மாணவர்கள் தம் கற்றலுக்காகப் பயன்படுத்திப் பழுதாகிப் போவதே சாலச்சிறந்தது. இவரது கற்பித்தலில் தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகள் மிகுந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இதுமட்டுமின்றி, எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுதோறும் நடத்தப்படும் தேசிய திறனாய்வு வழித் தகுதித் தேர்வு (NMMS) மூலமாக மாதந்தோறும் கிடைக்கப்பெறும் ரூபாய் ஆயிரம் உதவித்தொகையானது தம் பள்ளிப் பிள்ளைகளுக்கு மட்டும் அல்லாமல் ஒன்றியத்தில் உள்ள தகுதியும் ஆர்வமும் மிக்க ஏனைய பள்ளி மாணவர்களுக்கும் கிடைக்கச் செய்திட தன்னார்வ பயிற்சி வகுப்புகளை இவர் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இவரது இந்த உயரிய செயல் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருவது கூடுதல் சிறப்பாகும். இதற்கு இவருடைய சக ஆசிரிய நண்பர்கள் மனமுவந்து எல்லா வகையிலும் உதவி வருவது பாராட்டத்தக்கது.



மேலும், இப்பயிற்சியின்போது நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு அறுசுவை உணவுடன் பயிற்சிக்குப் பின் மாணவர்கள் பயிற்சியில் கற்றுக்கொண்டவற்றை வீட்டிலும் ஓய்வு நேர வகுப்பிலும் வலுப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அதற்குண்டான பல பக்கங்கள் நிறைந்த கற்றல் பொருள்கள்

விலையில்லாமல் வழங்கி வருவதும் இவரது சமூக சேவைக்குத் தக்க சான்றாகும்.

அறியாமை இருளை அகற்றுவதுதான் ஆசிரியரின் தலையாயப் பணி. அந்த வகையில் இவர் தாம் கற்றுக்கொண்ட புத்தாக்க அறிவை மற்றவர்களுக்குக் கடத்துவதை சமுதாயப் பணியாகக் கொண்டுள்ளதை இவரது கற்கண்டு கணிதம் இணையதளம் பறைசாற்றும். மாணவர்களை மட்டுமல்லாது சக ஆசிரியர் பேரினத்தையும் தம் அரும்பெரும் செயல்களால் ஒளிரச் செய்து கொண்டிருக்கும் இவர் ஓர் ஒப்பற்ற ஒளிரும் ஆசிரியர் என்பதில் மாற்றுக்கருத்து யாருக்கும் இருக்க முடியாது!

இன்னும் தொடர்வார்கள்...

## முனைவர் மணி கணேசன்

கைப்பேசி: 9442965431

---

வரமாய் வந்த வைரமோ நீ
தவமாய் வேண்டி
நின்றோர் இவ்வுலகில் பலர்.

வரமாய் வந்தாய்
வயிறு நிறைந்தது...
ஒவ்வொரு அசைவிலும்
அதீத கவனம் - உன்னாலே...
தாய் வீடு மறந்து போனது
உன் முகம் காண...
உயிரணுவால் உயிரானாய்...
உறவானவனின் உயிரல்லவோ நீ!
ஈருயிராய் காக்கின்றேன்
மடிதனில் இவ்மூன்று மாதங்களாய்...
காத்திருக்கிறேன் - உன்
பூமுகம் காண...

- இலக்கியா இளவரசன்

# நாடும் தவறும்...

வணக்கம். நாம் வசித்துக் கொண்டிருக்கும் சமூகத்தில் பல தவறுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. இருந்தும் பெரும்பாலானோரிடம் சமூகத்தில் நடக்கும் தவறு என்னவென்று கேட்டால் அவர்கள் மனதில் முதலில் தோன்றுவது பாலியல் கொடுமை தான்.

இக்கட்டுரை அந்த தலைப்பைப் பற்றி இல்லையென்றாலும் அதைப் பற்றி சிலர் கூறும் காரணங்களில் ஒன்றைப் பற்றி தான்.

பாலியல் குற்றங்களுக்கு என்ன தீர்வு என்று கேட்டால் பலரும் பல கருத்துக்களை கூறுவர். அதிலும் பலர் கடுமையான தண்டனைகள் இல்லாததே காரணம் என்கிறார்கள். அவர்கள் கூறுவதில் தவறொன்றுமில்லை. ஆனால் அதற்கு உதாரணமாக வெளிநாடுகளை கூறுவது தான் தவறு. காரணம், வெளிநாடுகளில் பாலியல் தொல்லைகளுக்கு கடும் தண்டனைகள் உள்ளன ஆனால் பாலியல் தண்டனைகளுக்கு மட்டும் தான் கடும் தண்டனைகள் உள்ளதா?

வெளிநாடுகளில் சாலையில் குப்பைகளை வீசினால் கூட அதற்குறிய தண்டனைகள் வழங்கப்படுகின்றன. நீங்கள் கேட்கலாம் குப்பையை சாலையில் வீசுவதும், பாலியல் வன்கொடுமை செய்வதும் ஒன்றா என்று இரண்டும் ஒன்றில்லை தான். ஆனால் அங்கு சிறிய சிறிய தவறுகளுக்கு கூட தண்டனைகள் கொடுக்கப்படுவதால் தான் அங்கு நடக்கும் பெரிய தவறுகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. நம்மில் பலர் அதைப்பற்றி சிந்திப்பதில்லை.

இன்னும் பலர் கூறும் அனைவரும் அறிவதே வேறொன்றும் இல்லை ஆடை தான் மற்றொரு காரணம். இது இன்னும் விவாததிற்கு ஏற்ற தலைப்பாகவே உள்ளது. பெரும்பாலானோர் பாலியல் குற்றங்களுக்கு ஆடை தான் காரணம் என்கிறார்கள். அதற்கும் சிலர் வெளிநாடுகளின் ஆடை நாகரீகத்தையே உதாரணமாக கூறுகின்றனர்.

வெளிநாடுகளில் மக்கள் நம் நாட்டை ஒப்பிடும்போது ஆடை கவர்ச்சியாகத் தான் அணிவார்கள். நாமும் அதை பின்பற்றுகிறோம் ஆனால் அவர்கள் ஒரு இடத்திற்கு செல்கிறார்கள் என்றால் அந்த இடத்தின் ஆடை விதிமுறைகளை சகித்துக்கொள்ளாமல் பின்பற்றுகிறார்கள். நம்மில் எத்தனை பேர் இது போன்ற விதிமுறைகளை பின்பற்றுகிறோம்?

அங்கு உள்ளவர்களும் மனிதர்கள் தான் அவர்களும் உணர்ச்சியுடையவர்கள் தான் அவர்கள் நாட்டு நாகரிகத்திற்கேற்ப உணர்ச்சிகளை வெளிப்படுத்த சட்டரீதியாகவே சில வழிகளும் உண்டு ஆனால் நம் நாட்டில்.....?

மேலும் வெளிநாடுகளில் பெரும்பாலும் ஒருவரின் பள்ளி செலவிற்கு மட்டுமே பெற்றோர்கள் செலவழிக்கிறார்கள் மேற்படிப்பிற்கு அவரவர் சொந்த செலவில் தான் படிக்க வேண்டும். பிள்ளைகளின் மேற்படிப்பிற்கு செலவிடும் பெற்றோர்களின் எண்ணிக்கை மிக குறைவு. ஆனால் நம் நாட்டில் எத்தனை பெற்றோர் இப்படி தன் பிள்ளைகளை வளர்க்கின்றனர்? இது போன்றவற்றை ஏன் நம் நாட்டில் பின்பற்றவில்லை?

ஒரு நாட்டின் நாகரீகத்தை பின்பற்றுகிறோம் என்றால் அனைத்தையுமே பின்பற்றினால் தான் அந்த நாட்டையும் நம் நாட்டையும் ஒப்பிட்டு பார்க்க முடியும். நாம் நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு சிலவற்றை மட்டும் பின்பற்றிக்கொண்டு அந்த நாட்டில் ஏன் தவறுகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது நம் நாட்டில் ஏன் தவறுகள் தலைவிரித்து ஆடுகிறது என்று கேள்வி கேப்பதில் பயன் ஒன்றுமில்லை.

இந்த தவறு இதனால் தான் நடக்கிறது, இந்த தவறுக்கு இது தான் காரணம் என்று நான் கூறவில்லை. வெளிநாடுகளில் மக்கள் அவர்கள் நாட்டின் நாகரீகத்திற்கு ஏற்ப வாழ்கின்றனர். நாமும் நம் நாட்டின் நாகரீகத்திற்கு ஏற்ப நமது வாழ்க்கையை வழிநடத்திச் சென்றால் தவறுகளின் எண்ணிக்கை குறையும்.

ஒருவன் தவறான வழியில் வளர்ந்து, அவன் நல்லவனாக வாழவேண்டும் என்று நாம் நினைத்தால் அது தவறு. ஒருவன் வளரும் வழியே நல்லதாக இருந்தால் தான் அவன் நல்லவனாக இருக்க முடியும்.

நன்றி.




விவேக்மணி

இயற்கையின் வரமான மரம் செடி
கொடிகளை உயிராய் வளர்த்தனர்
நம் முன்னோர்கள் அன்று..

நமக்கு அவர்கள் அளித்த வரத்தை நாம்
வருங்கால தலைமுறைக்கு தராமலே
அழிக்கிறோம் இன்று....

உறவுகள் பாசத்தால் இணைந்து
குடும்பங்கள் மகிழ்ந்தது அன்று...

பணம் இருந்தால் தான் உறவுகள் கூட
மதிக்கிறது இன்று....

தன் மகளுக்கு சீர்வரிசையாய் தன்
நிலங்களை தந்தனர் அன்று...

நிலத்தை விற்றும் நகைகள் கூட
வாங்கமுடியாமல் தவிக்கிறது
குடும்பங்கள் இன்று...

விவசாயம் செய்து தன் நெல்லை
உணவாக்கி உண்டார்கள் அன்று...

இன்று விவசாயி கூட அரிசி
கிடைக்காமல் அரசை
எதிர்பார்க்கிறார்கள் இன்று...

விவசாயத்தால் வாழ்ந்தனர் அன்று...

சாராயத்தால் அழிகின்றனர் இன்று.....

படித்தாலும் படிக்கவில்லை என்றாலும்
மனிதநேயம் இருந்தது அன்று...

பலருக்கு மனிதநேயத்துக்கு அர்த்தம்
கூட தெரியவில்லை இன்று.....

மக்களுக்கு ஏதாவது செய்யனும் என்று
நினைத்தார்கள் அரசியல்வாதிகள்
அன்று...

மக்களை வைத்து நமக்கு
தேவையானதை செய்துகொள்ள
நினைக்கிறார்கள் இன்று....

சத்தான உணவுகளை மட்டும்
உண்டனர் அன்று...

சத்து மாத்திரைகளை தேடுகின்றனர்
இன்று....

மருத்துவமனை இல்லை மரணமும்
அதிகம் இல்லை அன்று....

மருத்துவமனைகள் நிரம்பி வழிகிறது
மரணங்களை விரைவாக தேடி
இன்று....

நான் அன்று பிறந்திருந்தால் இன்று
வரை இருந்திருப்பேன்...

இன்று பிறந்துவிட்டேன் என்று வரை
இருப்பேன் கூட தெரியவில்லை.....



ஆனந்த் ரெய்னா
முத்துப்பேட்டை

# ரத்த சரித்திரம்


திருச்சி பார்த்தி

ஒருபுறம் விஜயநகரமக்கள் தங்களுக்கு பின்னால் காத்துக்கொண்டிருக்கும் ஆபத்தையும், கொடூரத்தையும் அப்போது உணரவில்லை, எத்தனையோ முறை சுல்தான்கள் படையெடுத்து வருவதும், அதனை விஜயநகரப்படைகள் விரட்டுவதும், வாடிக்கை தானே! என மக்கள் முன்னேற்பாடாய் இல்லாது வழக்கம்போல் அன்றிடப்பணிகளிலும், விருபாக்ஷா கோவிலிலுள்ள அன்றைய பெரிய வணிகவளாகங்களிலும், கூட்டமாய் கூடியிருந்தனர் (அந்த வணிக வளாகத்தின் எஞ்சிய மிச்சம் கூட இன்று பல மைல்கள் தூரம் காணப்படுகிறது)

மறுபுறம் போரின் சூழ்நிலையோ வேறாக இருந்தது. நைஜாம்ஷாவி கையில் மாட்டிய ராமராயன் ஈவுஇரக்கமின்றி இறு துண்டாய் வெட்டப்பட்டான். சீவிய தலையை ஓர் உயரிய ஈட்டியில் சொருகி விஜயநகரவீரர்கள் முன்னால் நைஜம்ஷாவி உயர்த்திப் பிடித்தான். களத்திலிருந்த வீரர்களின் போக்கு இதிலிருந்து மாறியது. வழிநடத்த தலைவன் இல்லாததால், உத்தரவிட தலைமை இல்லாததால், ஆங்காங்கே சிதறினர். படைபலத்தில் பெரியதாக விஜயநகர பேரரசு இருந்தாலும், பின்வாங்கி ஓடியது சுல்தாதானிய வீரர்களுக்கு குதூகலமானது எதிரிப்படைகளை விரட்டிச்சென்று நாசம் செய்தனர். அன்று ஒருநாளில் மட்டுமே ஒருலட்சத்திற்கும் மேற்ப்பட்ட விஜயநகர வீரர்களை வெட்டி வீழ்த்தினர்.

திரும்பிவந்து போர்புரியவும், தலைநகரை காக்கவும் உறுத்தான ஓர் ஆள் இல்லாததால் சுல்தான் படைகள் விஜயநகரை விருப்பம்போல் சூறையாடின. அவர்களின் எண்ணம் விஜயநகரை வெற்றிகொள்வது மட்டுமின்றி, இனி எக்காலமும் இப்படியொரு அரசு இருந்த சுவடு தெரியக்கூடா வண்ணம் நகரை அழிக்க முனைந்தனர். எவர் எக்கேடுபோனால் என்ன என்ற நினைப்பில் திருமலை, கருவூலத்திலிருந்த செல்வங்களை 1500 யானைகளின் மேல் ஏற்றிவிட்டு சதாசிவராய்ன் மற்றும் அரசகுடும்பத்தினருடன் தப்பியோடிவிட்டான். முஸ்லீம் படைகளுடன், திருடர்களும் கேட்பாரற்று கிடந்த விஜயநகரை கொள்ளையடித்தனர். எதிரில் படும் அனைவரையும் வெட்டிவீழ்த்த உத்தரவு வேறு வந்ததால், வீடுபுகுந்து நாசம் செய்தனர். நேற்றுவரை ஒப்பற்ற செல்வங்களை அளித்து, மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்த தங்கள் நகரம், இன்று ஒருபொழுதில் இவ்வளவு மாற்றமடைந்ததை யார்தான் யூகித்திருப்பர்?

சுமார் ஆறு மாதகாலம் ஆற அமர விஜயநகரை அழித்தனர். அனைத்து கட்டடங்களையும் சிதைத்தனர். கோவில்களை துவம்சம் பண்ணினர். தனிப்பெரும் சன்னதியாய் பெரியளவில் அன்று கொண்டாடப்பட்ட புகழபெற்ற நரசிம்மர் சன்னதியை சின்னாபின்னமாக்கினர். எழில்மிகு தேர்சிற்பம் நாசமாக்கப்பட்டது. அந்த தேர்சிற்பத்தின் சிறப்பினை சுருக்கமாய் காண்போம்.

கோயிலின் கருவறை போன்றே தேரும் உபபீடம், அதிட்டானம், பாதம், விமானம் போன்ற உறுப்புகளால் அமைந்திருப்பதால் 'கோயிலின் மறுவடிவம்' என்றும், 'நகரும் கோயில்' என்றும் அழைக்கப்படுகிறது. தேர், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்பங்கள, அழகிய வண்ணம் தீட்டிய ஆலவட்டங்கள், தோரணங்கள் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். தேரினை எவ்வாறு வடிவமைக்க வேண்டும் என மானசாரமும், விட்டுணு தத்துவ சம்கிதையும் இலக்கணம் வகுக்கின்றன.

ஹம்பி விட்டலா கோயில் வளாகத்தின் கிழக்கு பகுதியில் இந்த தேர் உள்ளது. ஒரு சிறிய கோயில் போன்றே பல நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகளுடன் இந்த தேர் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு சிறிய கோயில் போன்றே பல நுணுக்கமான சிற்ப வேலைப்பாடுகளுடன் இந்த கல் தேர் செதுக்கப்பட்டுள்ளது. இந்த தேரின் சக்கரங்களும் கல்லால் ஆனவை என்பது மட்டுமல்லாமல் இந்த சக்கரங்கள் ஒட்டுமொத்த கல் தேரின் எடையையும் தாங்கியபடி நகரவும் கூடியவை என்பது இதன் சிறப்பாய் கருதப்படுகிறது.

பயணம் செய்யும் ஊர்தியாக இருந்த தேரினைப் பிற்காலங்களில் ஊராத கற்றேராகவும் வடிக்கத் தொடங்கினர். 12-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு கோயில்களில் கருவறைக்கு முன் சக்கரங்களால் அமைந்த மண்டபங்கள் தேர் போன்ற அமைப்பில் உருவாக்கப்பட்டன. அம்மண்டபங்களைக் குதிரை, யானை போன்றவை இழுத்துச் செல்வது போல வடிவமைக்கப்படும் கலைப்பாணி தோன்றியது.

ஹம்பி கல்தேருக்கு முன்னர் நம் தமிழகத்தில் பாண்டியர்கால தேர் மண்டபங்கள் உள்ளது, உதாரணமாய் குன்னான்டார்கோவில், குடந்தை நாகேஸ்வரன் கோவிலை கூறலாம். ஆனால் அவை வடிவத்தில் தேர்பூட்டிய குதிரை பாயும் நிலையில் செய்யப்பட்ட நிலையான மண்டபங்களே. ஆனால் ஹம்பி தேர் இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டு இயங்கும் ஓர் தேரினைபோலவே வடிவமைத்துள்ளனர். முன்புறம் இரு யானைகள் பூட்டி இழுத்து செல்வதுபோல் வடிவமைத்துள்ளனர். தேரினை சுற்றிலும் பூதகனங்களில் நாட்டியங்கள், கூத்து சிற்பங்கள், அழகிய கொடுங்கைகள், தேரின் சக்கரங்களில் கூட வரிவரியாய் இழைத்துள்ளனர். இத்தேர் இடிக்கப்படாமல் முழுத்தோற்றத்தில் இருந்த அன்றைய கோலத்தை மனக்கண்ணில் நிறுத்தி பார்த்தால், உண்மையில் அது ஓர் அதிசயமாய் அன்று காட்சியளித்திருக்கும். இந்த ஓவியம் அன்று வண்ணத்தால் அலங்கரித்திருந்தது, அதன் எச்சங்கள் வாயிலாய் அறியலாம்.

இத்தகைய சிறப்புகளாலே, கர்நாடக அரசு சின்னங்களில், புதிய 50 ரூபாய் தாளிலும் இத்தேர் சிற்பம் இடம்பெற்றுள்ளது.

இந்த தேர் சிற்பத்தை கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை.
இவ்வாறு கொடூரமாய் அழிக்கப்பட்ட நகரை மீட்க திருமலை எவ்வளவோ முயன்றும்

முடியவில்லை.நாட்டில் பணத்தட்டுப்பாடும், பஞ்சமும் பெருகியது, திடீர் கலகக்காரர்களும், கொள்ளையர்களும் ஆங்காங்கே தோன்றினர். இவ்வளவு கொடூரம் நிகழ்ந்தும் புத்திமாறாத திருமலை, தன் சிற்றப்பனை அழிக்க உதவிக்கு அலிஅடில்ஷாவை அழைத்தான். அவனுக்குபின் அவன் மகன் சீரங்கன், என வலுகுன்றிய ஆட்சியாளர்களாலேயே ஆளப்பட்டது. 1652 ம் ஆண்டு கர்நாடகம் முழுவதும் முஸ்லீம் ஆட்சிக்கு சென்றது.அதற்குமுன் விஜயநகரபேரரசின் கீழ் அடங்கிய நாயக்கர் பாளையங்களான, தஞ்சாவூர், செஞ்சி ஆகியவை 1649லேயே பீஜப்பூர் சுல்தான்களிடம் வீழ்ந்தன. அதன்பின் போர்த்துக்கீசியர் வருகை என முழுமையாக வீழ்ந்தது விஜயநகரம்.

விஜயநகரின் வீழ்ச்சிக்கு அடிகோலிய ராமராயனின் வெட்டப்பட்ட தலையானது, 1565 ஜனவரி 26 முதல் 1829 ஜனவரி 26 வரை சாலையோரம் உள்ள சாக்கடையில் பதப்படுத்தப்பட்டு ஈட்டியில் சொருகி வைத்திருந்தனர். இதனை பின்னர் ஓர் வெள்ளைக்கார அதிகாரி அப்புறப்படுத்தியுள்ளார்.

15-16 ம் நூற்றாண்டுகளில் உச்சத்திலிருந்த ஓர் அரசு குறித்து அறிந்த சில தகவல்களை கூற வாய்ப்பளித்ததற்கு நன்றி=நீ=நீ

தகவல் திருச்சி பார்த்தி

---

# வானம்!?

வானமே
நீதான் எத்தனை அழகு...!
எத்தனை ஆச்சர்யம்...!?

பால் நிலவும் உன்னிடம்தான்....!
நகைக்கும் நட்சத்திரங்களும்
உன்னிடம்தான்...!?

சுட்டெரிக்கும்
சூரியன் உன்னிடம்....!
கொட்டும் மழையும்
உன்னிடம்....!
பயமுறுத்தும் இருளும்
உன்னிடமே...!?

கவிஞனுக்கு
கவிதை
தந்தாய்....!?
உழவனுக்கு உழைப்பு தந்தாய்...!?
வியாபாரிக்கு இலாபமும்
தந்தாய்...!?

இங்கு எல்லோருக்கும்
எல்லாமும்
நீயே தந்தாய்....!?

வானம் பார்க்கிறேன்..!.
ஞானம் கொள்கிறேன்...!?



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

## என் வாழ்க்கைப் பயணத்தில்

நான்
போடும் வேடங்கள்
எனக்கே பிடிக்கவில்லையென்றாலும்,
தவிர்க்க
முடியாமல் போகிறது ...
ஒவ்வொரு நாளும்
புது புது வேடங்கள்!

தாய்க்கு தலைமகன்
தந்தைக்கு இளையமகன்,
இரண்டு பேருக்கும்
உயிரோடு
கொள்ளி வைத்தான்...
குடிகார மகன்!

தேவதைகள்
எந்த மொழியில்
பேசுவார்கள் என
அறிந்து கொண்டேன்...
என் குழந்தை
முதன் முதலாய் பேசும்
போது!

மெழுகுவர்த்தி வியாபாரி
வீடு,
இருளில் மூழ்கிக்கிடக்கிறது...
விபத்தில்
பார்வையைத் தொலைத்த
பின்னொரு நாளில்!

மூன்று பக்கம்
கவிதைகளாலும்
ஒரு பக்கம்
கனவுகளாலும்
சூழப்பட்டிருக்கிறது...
தனிமைபடுத்தப்பட்ட
கவிஞர்களின் வாழ்க்கை!

வாழ்வில் சில நாட்கள்
பசியோடும்,
வாழ்வில் பல நாட்கள்
வலியோடும்
கடந்து போவதும்
தவிர்க்க முடியாததாகிறது...
என் வாழ்வில் மட்டும்!

------

**மு.முபாரக்**
எண் 273 வாளாடி கூட்டுறவு வங்கி,
வாளாடி,
திருச்சி மாவட்டம்
கைப்பேசி: 8072600090

# ஹிட்லர்

## (ஒரு சாமானியன் சர்வாதிகாரி ஆன கதை)

முதல் இரண்டு உலகப்போருக்கும் மூலகாரணமாய் இருந்த நாடு ஜெர்மனி. சிறுவயதிலேயே ஹிட்லருக்கு உலகை தன் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஆசை இருந்தது. ஓவியராக ஆசைப்பட்ட அவருக்கு ஓவியக்கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. அவர் ஜெர்மன் ராணுவத்தில் சேரந்த குறுகிய காலத்திலேயே உலகப்போர் மூண்டது. அதில் கலந்து கொண்ட ஹிட்லருக்கு பலத்த காயங்களும், கண்பார்வையில் பாதிப்பும் ஏற்பட்டது. யூதர்களின் துரோகமும், ரஷ்யாவுமே ஜெர்மனியின் தோல்விக்குக் காரணமாய் அமைந்தன. ஹிட்லர் யூதர்களையும், ரஷ்யாவையும் பழிதீர்க்க நினைத்தார்.

முதல் உலகப்போருக்குப் முன்பு ரஷ்யா தனது நாட்டிலிருந்து யூதர்களைத் துரத்தியடித்தது. சொந்த நாடின்றி நாடோடிகளாக அலைந்த யூதர்களுக்கு ஜெர்மனி அடைக்கலம் கொடுத்தது. முதல் உலகப்போரில் ஜெர்மனிக்கு எதிராக ரஷ்யாவிடம் இங்கிலாந்து கைகோர்த்தது பிடிக்காமல் யூதர்கள் தங்களுக்கு அடைக்கலம் அளித்த ஜெர்மனியை ஆதரித்தனர்.

ஆனால் உள்ளடி வேலையாக எங்களுக்கு பாலஸ்தீனத்தைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தால் ஜெர்மனிக்கு எதிராக அமெரிக்காவை போரில் இறக்குகிறோம் என இங்கிலாந்திடம் ரகசியமாய் பேரம் பேசினார்கள். இங்கிலாந்து அந்த நிபந்தனையை ஏற்கவே அமெரிக்கா போரில் இறங்கியது. ஜெர்மனி சின்னாபின்னமானது. லட்சக்கணக்கான ஜெர்மனியர்கள் கொல்லப்பட்டனர். போருக்குப் பிறகான ஜெர்மனியில் யூதர்கள் கையே ஓங்கியிருந்தது. யூதர்களிடம் ஜெர்மனியர்கள் அடிமை போல் வேலை பார்க்கும் பரிதாபமான நிலை ஏற்பட்டது.

பஞ்சம் பிழைக்க வந்த யூதர்களிடம் கையேந்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில்தான் ஜெர்மனி அன்று இருந்தது. இந்த வாய்ப்பினை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்ட யூதர்கள் உழைப்பு என்ற பெயரில் ஜெர்மனியர்களின் உதிரத்தைக் குடித்தனர். சொந்த நாட்டிலேயே அகதிகளைவிடக் கேவலமாக நடத்தப்பட்டனர்.

விடிமோட்சத்துக்கு ஏங்கியவாறே பொழுதைக் கழித்தனர். பூலோக வாழ்வு நரகத்தைவிடக் கொடுமையானதாக இருந்தது ஜெர்மனியர்களுக்கு. இந்தக் காலகட்டத்தில் தான் தேசிய சோசியலிஸ்ட் ஜெர்மன் தொழிலாளர் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார் ஹிட்லர். அவரது ஆக்ரோஷமான பேச்சு ஜெர்மனியர்களை மிகவும் கவர்ந்தது. அவரது பிரசங்கத்தைக் கேட்க லட்சணக்கான மக்கள் திரண்டனர்.

ஹிண்டன்பெர்க் தான் அதிபராவதற்கு ஹிட்லரின் தயவு தேவையென்பதால் ஹிட்லரை சான்சிலர் ஆக்கினார்.

ஜெர்மனியில் உள்நாட்டுக் கலவரம் வெடித்தபோது போராட்டக்காரர்களால் நாடாளுமன்றம் தீவைத்து கொளுத்தப்பட்டது. கலவரத்தை ஒடுக்குவதற்கான பொறுப்பை ஹிட்லரிடம் ஒப்படைத்து அவரை பிரதமாக்கினார் ஹிண்டன்பெர்க். ஹிட்லர் பிரதமராக பதவியேற்ற ஓராண்டுக்குள்ளேயே ஹிண்டன்பெர்க் மரணமடைந்தார்.

ஹிட்லர் ஜெர்மனியின் ஜனாதிபதியானார். ஜெர்மனியில் இனி ஜனநாயகம் கிடையாது என அவசரச் சட்டம் கொண்டுவந்தார். ஜெர்மனியர்களின் யூத எதிர்ப்புக்கு மேலும் வலுசேர்ப்பதாக இருந்தது ஹிட்லரின் பேச்சு. ஜெர்மனியின் தலையெழுத்தை நிர்ணயிப்பவர்களாக யூதர்கள் இருந்தபடியால், ஜெர்மனியை மீண்டெடுக்க ஒரு தலைவன் வரமாட்டானா என ஏங்கிக் கொண்டிருந்த ஜெர்மனியர்களுக்கு ஹிட்லர் தங்களைக் காக்க வந்த ரட்சகராகவே தெரிந்தார்.

தங்களை விலங்குகளைவிட மோசமாக நடத்திய யூதர்கள் கொல்லப்படவேண்டும் என்று ஜெர்மனியர்கள் நினைத்ததை ஹிட்லர் செயல்படுத்தத் துவங்கினார். ஒரு நாளில் கிட்டத்தட்ட ஆறாயிரம் யூதர்கள் வரை ஜெர்மன் ராணுவத்தால் கொல்லப்பட்டு வந்தனர். ஒட்டுமொத்த தேசமும் யூதர்களின் பிணக்குவியல்களைப் பார்த்து வெற்றிப் பெருமிதம் கொண்டது. உலகின் கடைசி யூதனையும் தேடிப் பிடித்துக் கொல்வோம் என ஹிட்லர் கர்ஜித்தார்.

இரண்டாம் உலகப்போரில் இத்தாலியுடனும், ஜப்பானுடனும் கூட்டு சேர்ந்து ஹிட்லர் நடத்திய தாக்குதல்கள் உலகையே மிரள வைத்தன. ஹிட்லரால் உலகையே ஒருகுடையின் கீழ் கொண்டுவந்திருக்க முடியும். அவர் ரஷ்யாவின் மீது எடுத்த படையெடுப்பு ஜெர்மனியின் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிட்டது. ஹிட்லரிடம் தான் செய்வது தவறு என்ற குற்றவுணர்வு ஒருபோதும் இருந்ததில்லை, கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுபவனாகவே கடைசி வரை தன்னைக் கருதிக் கொண்டார். உலக நாடுகளுக்கு ஹிட்லர் வில்லனாகத் தெரிந்தாலும் ஜெர்மனியர்களுக்கு என்றுமே அவர்தான் கதாநாயகன்.

- ப.மதியழகன்,
மன்னார்குடி
கைப்பேசி: 9597332952, 9095584535
mathi2134@gmail.com

# ஆண்மையை அறிமுகப்படுத்திய பெண்மை

அன்று...

மாதராய் பிறக்க மாதவம் செய்திருக்க வேண்டும்

இன்றோ பாவங்கள் பல புரிந்திருக்க வேண்டும்...?

பாவையோ பாவம் எத்தனை கொடுமை-சோகங்கள் மட்டுமே அவளது உடைமை...!

பருவமடைந்த பாவத்திற்கு பள்ளி படிப்பை விடுகிறாள்...

துள்ளி விளையாடும் வயதில் ஒதுக்கி தள்ளி வைக்கப்படுகிறாள்...!

சமூகத்தின் கட்டமைப்பில் தான் எப்போதும் அவளின் வாழ்க்கை நிர்ணயிக்கப்படுகிறது...

அவளின் கனவும் ஆசையும் தற்போதும் நிராகரிக்கப்படுகிறது...!

தகப்பன் அவனும் அவளுக்கு தன்னம்பிக்கை தருவதில்லை-கணவன் அவனும் அவள் கனவுக்கு கைக்கொடுப்பதில்லை..!

பெண்பிள்ளைகள் யாவும் இன்று வேடிக்கை பொம்மைகள் போலாகிறது...

அந்த மூன்று நாள் உதிரப்போக்கின் வலி உணர்ந்தால் பொழுதுப்போக்கிற்காக கூட அவளை கேலி செய்ய மனம் வராது...!

தொட்டு வணங்க வேண்டிய பெண்மையை தீட்டு என்று ஒதுக்கி வைக்கும் எண்ணம் வளராது...!

அவள் காதல் செய்தி, காற்றில் பரவ தண்டனை கைதி போல் சிக்குண்டு போகிறாள்!

உறவும் ஊரும் குறை கூற திக்குதெரியாமல் தவிக்கிறாள்...!

பெண் மீது எத்தனையே வக்கிரம்-இருந்தும் அவளோ ஆணுக்கு அடிமை இது என்ன தந்திரம்...?

பெண்மை என்பது எதிர் பாலினம் தான் எதிரி பாலினம் அல்ல...

உன்னை மகனே என்று அள்ளி அணைத்தவளும் பெண் தான்-மகப்பேறு கண்டு உன் மகனை உனக்கு அள்ளி கொடுத்தவளும் பெண் தான்...

ஒன்றை என்றும் நினைவில் கொள்வோம்...

ஆண்மை என்ற ஒன்றை இம்மண்ணில் அறிமுகப்படுத்தியதே பெண்மை என்ற பெரும்வலிமை தான்



மணிபாரதி தங்கசுந்தர்

# யார் குற்றவாளி?

நன்றாக படித்து மருத்துவர் ஆக வேண்டும் என்ற கனவோடு 11 ஆம் வகுப்பை படிக்காமல் 2 வருடம் 12 ஆம் வகுப்பை படித்து 90% மதிப்பெண்கள் பெற்று மருத்துவ படிப்பிற்கு விண்ணப்பித்தால் வருகிறது புது சட்டம் நீட் என்ற தேசிய நுழைவு தேர்வு இதில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட அவலம். இப்போது குற்றவாளிகளாகவும் மாற்றி உள்ளது.

மருத்துவம் படிக்க வேண்டும் என்ற ஆசையில் 2 முறை நீட் தேர்வு எழுதி தேர்ச்சி பெறதா மாணவர் அவர் தந்தையின் ஆசையால் ஆள்மாறாட்டம் செய்து நீட் தேர்வு எழுதி மருத்துவ படிப்பில் சேர்ந்து தற்போது மாட்டி கொண்டு சிறையில் இருக்கிறார் இது அவருடைய தவறா ?

இல்லை இந்த சமூகத்தின் தவறு நம்மை ஆள நாம் தேர்ந்தெடுத்தவர்களின் தவறு நன்றாக படித்து மருத்துவர் அல்லது வேறு துறையில் சாதித்திருக்க வேண்டிய மாணவர் அவரின் பெற்றோரின் ஆசையாலும், அரசாலும் இன்று குற்றவாளி ஆகி நிற்கிறார் இன்னும் எத்தனை பேர் என்று தெரியவில்லை இன்னும் கனவோடு படிக்கும் எத்தனை மாணவர்களின் வாழ்க்கை பாதிக்கும் இதை யார் சரி செய்ய முடியும் எல்லோரும் இந்த தேர்வுகளை புறக்கணித்தால் முடியும் வேறு எதுவும் இதற்கு தீர்வாகாது
இந்த ஆள் மாறாட்டத்தில் பல சோதனைகள் செய்த அதிகாரிகளுக்கு இது தெரியவில்லையா இதற்காக கையூட்டு பெற்ற அதிகாரிகள் யார் என்று விசாரித்து அவர்களுக்கு தான் தண்டனை கொடுக்க வேண்டும்.

இனி இது போன்ற செயல்களில் ஈடுபடாமல் பெற்றோர்கள் தங்கள் கனவுகளை பிள்ளைகள் மேல் திணிக்காமல். அவர்கள் நினைத்தது கிடைக்கவில்லை என்றாலும் அவர்களிடம் இருக்கும் மற்ற திறமைகளை கண்டறிந்து அதில் அவர்களை தன்னிகரற்ற தலைமையாக உருவாக்குங்கள்.



அருள் பாண்டியன். சி
பூவனூர்

1.
என் நிழல் கடக்கும்
எறும்பின் கால்கள்
சுட்டிருக்காது.

2.
சீவும் போதே
இளநீரை ருசிக்கிறது
வெட்டரிவாள்.

3.
பால்ய நண்பர்கள்
சந்திப்பில்
பின்னோக்கி நகர்கிறது
காலம்.

4.
தர விரும்பும்
அத்தனை முத்தங்களையும்
சப்தமில்லாமல் கொடு.

5.
மேகங்கள்
தரையிறங்க
நினைக்கும் போதெல்லாம்
மழையை பிரசவிக்கிறது
வானம்.

6.
அடித்து
துவைத்து விட்டாய்.
உலர்த்தி விட்டுப் போ
காய்ந்ததும்
என்னை சுருட்டிப் போவாய்.

7.
நினைவுகளை
பிழிகின்ற தருணம்...
நீ சாறாகிறாய்
நான் சக்கையாகிறேன்.

8.
வார்த்தைகளை
நகர்த்த முடியாமல்
தவிக்கிறான் கவிஞன்.
ஆடாமல் அசையாமல்
அப்படியே நிற்கிறது
கவிதை.

9.
நிற்காமல்
கொட்டுகிறது அருவி.
குடத்தோடு போனவள்
நடக்காமல் நிற்கிறாள்
ஓவியத்தில்.


10.
யாரும்
கண்டு கொள்ளவில்லை.
மண்ணில் மலர் விழுந்த
காயம்.

11.
வாசித்தபின்
நினைவில் நின்றால்
கவிதை.
நிற்காமல் போனாள்
தகவல்.

12.
வெறும் கோடுகளால்
ஓவியம் தீட்டியவனுக்கு
தெரிகிறது
கோலத்தில் அழகு.



பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
அலைபேசி: 9443139353.



ஓவியம்
ஸ்ரீநிவாஸ், இருள்நீக்கி





ஜெ. ஜெய் விஷ்ணு
த/பெ. A. ஜெய பிரகாஷ்
1ஆம் வகுப்பு






நவீன் (எ) ஸ்ரீராம்
இருள்நீக்கி




ஆதவன் கற்பகம் விஜயகுமார்
Campbell School of Innovation
சான் ஓசே,
அமெரிக்கா


ஓவியம்
சூர்யா
மன்னார்குடி

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    ThiravukoImagazine